**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

முன்னிலை–திரு.R.கோகுல் முருகன்,பி.ஏ.,பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் திங்கட்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 27 ம் நாள்

**அசல் வழக்கு எண்.625/2018**

( CNR.NO.TNKR03-001366-2018 )

அமிர்தலிங்கம் ...வாதி

**//எதிர்//**

பானுமதி ...பிரதிவாதி

இந்த வழக்கு இன்று 10.04.2023 இறுதியாக என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.ரமேஷ் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிக்கு செய்தித்தாளில் பிரசுரம் செய்யப்பட்டும், பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாத காரணத்தால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் வழக்குரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், வாதி தரப்பு வாதத்தை கேட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா கடன் தொகையான ரூ.4,75,850/–ஐ பிரதிவாதி பின்வட்டியுடன் வாதிக்கு திருப்பி செலுத்த வேண்டும் என்றும், தாவா செலவு தொகைக்காகவும் வாதியால் இவ்வழக்கு தாக்கல்.

**2) அசல் வழக்கின் வழக்குரையின் சுருக்கம்**

பிரதிவாதி வாதியிடம் அவருடைய அவசர நிமித்தம் குடும்ப தேவைக்காக கடந்த 09.08.2015 ம் தேதி கடன் கேட்டு ரூ.3,10,000/–ம் கடனாக பெற்றுக்கொண்டார் என்றும், பிரதிவாதி வாங்கிய கடனுக்கு கடனுறுதி சீட்டு ஒன்றை எழுதிக்கொடுத்ததாகவும், மேற்படி கடன் தொகைக்கு மாதம் ஒன்றுக்கு 100/–க்கு 1.50 ரூபாய் வட்டி வீதம் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டதாகவும், பிரதிவாதி

கடனை திருப்பி கொடுக்காமல் காலம் தாழ்த்தி வருவதாகவும், வாதி பிரதிவாதியிடம் பலமுறை கேட்டும் திருப்பி கொடுக்கவில்லை என்றும், வாதி பிரதிவாதிக்கு கடந்த 21.07.2018 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், அந்த அறிவிப்பிற்கு பின்னிட்டும் பிரதிவாதி எவ்வித தொகையும் கொடுக்க முன்வரவில்லை எனவும், எனவே, பிரதிவாதி வாதிக்கு வட்டி, அசல் சேர்த்து ரூ.4,75,850/– மற்றும் பின்வட்டி, செலவுத் தொகை தர உத்தரவிடக்கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) வாதி வழக்குரை தாக்கல் செய்தவுடன் பிரதிவாதிக்கு செய்தித்தாளில் பிரசுரம் செய்யப்பட்டும், பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் பிரதிவாதி ஒருதலைபட்சபடுத்தப்பட்டு அவருக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வழக்கு விசாரணைக்கு வாய்தா போடப்பட்டது. கடந்த 17.02.2023 அன்று வாதி முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் ஒன்றை தாக்கல் செய்து தன்னை வா.சா.1 ஆக விசாரித்துக் கொண்டார். அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. இத்தோடு வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

4) தற்பொழுது இந்த நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய முக்கியமான பிரச்சனை என்னவென்றால் வாதியின் தாவா அனுமதிக்கப்படக்கூடியதா? அல்லது இல்லையா? என்பதேயாகும்.

**<u>5)பிரச்சனைக்கு தீர்வு</u>**

பிரதிவாதி வாதியிடம் அவருடைய அவசர நிமித்தம் குடும்ப தேவைக்காக ரூ.3,10,000/–ம் கடனாக பெற்றுக்கொண்டு பிரதிவாதி பின்வட்டி மற்றும் செலவு தொகையுடன் வாதிக்கு திருப்பி செலுத்த உத்திரவிடக்கோரி வாதியால் இப்பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிக்கு செய்தித்தாளில் பிரசுரம் செய்யப்பட்டும், பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாக வைக்கப்பட்டார். வாதி தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்காக

வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு, வா.சா.1 ன் மூலமாக வா.சா.ஆ.1 ஆக கடந்த 09.08.2015 அன்று பிரதிவாதி வாதிக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்த புரோநோட்டு அசல், வா.சா.ஆ.2 ஆக கடந்த 21.07.2018 அன்று பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல், வா.சா.ஆ.3 ஆக கடந்த 21.07.2018 அஞ்சலக ரசீது அசல் போன்ற ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. வாதி தரப்பு சாட்சியத்தையும், வாதியின் ஆவணங்களை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்யும்போது, பிரதிவாதி வாதியிடமிருந்து ரூ.3,10,000/–ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதற்கு வாதியின் பெயருக்கு ஒரு புரோநோட்டு ஒன்று எழுதி கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 ன் கீழான சட்டப்படியான அனுமானங்கள் வாதிக்கு சாதகமாக எழுகிறது. மேற்படி, சட்டப்படியான அனுமானத்தை மறுத்தலிக்கும் வகையில் பிரதிவாதி தரப்பில் எவ்வித சான்றும் இல்லை. மேலும், பிரதிவாதி வழக்கில் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்ட நிலையில் இருந்து வருகிறார். ஆகவே, மேற்காண் விரிவான அறிந்தமைகளில் இருந்து வாதி அவருடைய வழக்கை நிரூபித்துள்ளார். இந்நிலையில் பிரதிவாதி வாதிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாததால் நிலுவை கடன் தொகை ரூ.4,75,850/–ஐ செலுத்த கடப்பாடு உடையவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

6) ஆகவே, இறுதியாக பிரதிவாதி வாதிக்கு ரூ.4,75,850/–ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி தொகையில் அசல் தொகை ரூ.3,10,000/–க்கு தாவா தாக்கல் செய்த தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடனும் செலுத்த வேண்டும் என்று தாவா செலவு தொகையுடன் வாதியின் தாவாவை அனுமதித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.

இத்தீர்ப்பானது, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால்

அவையறிய பகரப்பட்டது.

R GOKUL MURUGAN

Digitally signed by R GOKUL MURUGAN
DN: cn=R GOKUL MURUGAN, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**

**வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

| | |
|---|---|
| வா.சா.1 | அமிர்தலிங்கம் (வாதி) |

**வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 09.08.2015 | பிரதிவாதி வாதிக்கு ஆதரவாக எழுதிக் கொடுத்த புரோநோட்டு அசல் |
| வா.சா.ஆ.2 | 21.07.2018 | பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.3 | 21.07.2018 | அஞ்சலக ரசீது அசல் |

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.**

R GOKUL MURUGAN

Digitally signed by R GOKUL MURUGAN
DN: cn=R GOKUL MURUGAN, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**முதன்மை சார்பு நீதிபதி,**
**கரூர்.**